கவிஞர் நா.முத்துக்குமார் படைப்புகளில் உளவியல் சிந்தனைகள்

ஆய்வாளர்
ம. புவனேஸ்வரி

ஆய்வுநெறியாளர்
முனைவர் ச.குருஞானம்பிகா

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்விநிறுவனம்
முனைவர்பட்டஆய்விற்குரிய (**Ph.D.**) ஆய்வுச்சுருக்கம்

தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்உயர்கல்விநிறுவனம்
கோயம்புத்தூர் – 641 043.

2017 – 2021

பொருளடக்கம்

முன்னுரை

- ஆய்வுப் பொருள்
- ஆய்வுநோக்கம்
- ஆய்வுஎல்லை
- ஆய்வுஆதாரங்கள்
- கருதுகோள்
- ஆய்வுஅணுகுமுறை
- ஆய்வுமுன்னோடிகள்
- ஆய்வுப்பகுப்புமுறை
- இயல் - ஒன்று கவிஞர் நா.முத்துக்குமாரின் வாழ்வும் எழுத்தும்
- கவிஞர் நா.முத்துக்குமாரின் பிறப்பு
- கல்வியும், ஆளுமை வளர்ச்சியும்
- முதல் திரைப்படப் பாடல் எழுதும் வாய்ப்பு
- திரைப்படப் பாடல் வாய்ப்புகள்
- முத்துக்குமாரின் படைப்புகள்
- முத்துக்குமார் பெற்ற விருதுகள்
- இயல் - இரண்டு கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் தனிமனிதஉளவியல்
- உளவியல் - சொல் பொருள் விளக்கம்
- நா.முத்துக்குமார் கட்டுரைகளில் தனிமனிதஉளவியல்
- உளவியலும் தனிமனிதவளர்ச்சியும்
- உள்மனப் பதிவின் அடையாளங்கள்
- இயல் - மூன்று கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் குடும்பஉறவு உளவியல்
- குடும்பஉறவுகள்
- நா.முத்துக்குமாரின் படைப்புகளில் உறவுகள்
- நா.முத்துக்குமார் காணும் அம்மாக்கள்
- அப்பா
- தம்பி

- இயல் - நான்கு கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகஉளவியல்
- தனிமனிதனும்,சமூகமும்
- நா.முத்துக்குமார்படைப்புகளில் சமூகஉளவியல்
- வறுமை நிலை
- தொகுப்புரை
- பரிந்துரைகள்
- முதன்மைத் தரவுகள்
- ஆய்வுப் பயன்

முன்னுரை

மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவன். அவன் அவனது வாழ்வை கட்டுக்குள் வைத்துக் கொள்ளவும், வாழ்வியலை வளப்படுத்தவும் சிந்தித்தல் அவசியமாகிறது. இலக்கியப் படைப்பாளர்கள் சமூகச் சிக்கலையும் தனிமனிதச் சிக்கலையும் அவனது வாழ்வில் ஏற்படுத்திய நன்மை, தீமைகளையும் ஆராய்ந்து படைப்புகளைப் படைக்கின்றனர். மனித வாழ்வின் சிக்கல்களும், சிக்கல்களுக்கு உண்டான தீர்வுகளும் அவர்களின் அனுபவங்களின் வழி அறியப்பட்டு அவை நீதிகளாகவும், அடுத்த தலைமுறைகளுக்கான பாடங்களாகவும் அறிவுறுத்தப்படுகின்றன. தமிழில் புதுகவிதையின் வரலாறு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இன்று 'புதுக்கவிதை' என்ற சொல் 'நவீனக்கவிதை' என்ற நிலையை அடைந்து விட்டது. பாரதி, பாரதிதாசனுக்குப் பின் மயன், சி.சு.செல்லப்பா, நகுலன், பசுவய்யா, பிரமிள் போன்ற கவிஞர்கள் பல்வேறு வடிவங்களில் புதுக்கவிதைகளை எழுதினர். வெகுஜனக் கவிஞர்களுள் நா.காமராசன், அப்துல்ரகுமான், மு.மேத்தா, தமிழன்பன், வைரமுத்து போன்றோர்கள் புதுக்கவிதையைப் பிரபலப்படுத்தினர். கடந்த எண்பது ஆண்டுகள் வெகுஜன இதழ்களிலும், சிற்றிதழ்களிலும் பல கவிஞர்கள் புதுக்கவிதைகளை எழுதிவந்தனர். இவ்வரிசையில் நா.முத்துக்குமார் கவிஞராகவும், பாடலாசிரியராகவும் அறியப்பட்டவர். இவர் தனது எழுத்துக்களின் மூலம் முன் வைத்துள்ள உளவியல் சிந்தனைகளை ஆராய்வதாக இவ்வாய்வேடு அமைகின்றது.

ஆய்வுப் பொருள்

'கவிஞர் நா. முத்துக்குமார் படைப்புகளில் உளவியல் சிந்தனைகள்' என்னும் பொருளில் ஆய்வு அமைகிறது.

ஆய்வுநோக்கம்

அகம், ஆன்மா, உள்ளம், நெஞ்சம், சித்தம் என இவையனைத்தும் மனம் என்னும் பொருளை உணர்த்தும் சொற்கள் ஆகும். அம்மனமானது, செயல், சிந்தனை, விருப்பு, வெறுப்பு, ஆசை என இவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் காரணமாக வெளிப்படும் மனிதனின் ஆளுமைப் பண்புகளை ஆராய்வதே உளவியல். இத்தகைய உளவியலை கவிஞர் ந.முத்துக்குமார் தனது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். மனித

உணர்வுகளைத் தட்டியெழுப்பும் அனுவபத்தில் விளைந்த முத்துக்களாக சமூகத்திற்கு அவர் கூறும் கருத்துக்களை அறிய முற்படுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

ஆய்வுஎல்லை

இவ்வாய்விற்கு கவிஞர் நா.முத்துக்குமார் எழுதியுள்ள படைப்புகளில்,

- பாலகாண்டம்,
- கிராமம்,நகரம்,மாநகரம்,
- வேடிக்கைப்பார்ப்பவன்,
- அணிலாடும் முன்றில்

போன்ற கட்டுரை நூல்களும்,

- கவிதை நூல்கள்,
- திரைப்படப் பாடல்கள் ஆகியவை

ஆய்விற்குரிய எல்லைகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆய்வுஆதாரங்கள்

உளவியல் குறித்த நூல்கள், திறனாய்வு நூல்கள், தனிமனித அறம் குறித்த நூல்கள், வாழ்வியல்களஞ்சியங்கள், கலைக்களஞ்சியம், அகராதிகள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் போன்றவை இவ்வாய்விற்கு ஆய்வு ஆதாரங்களாக அமைகின்றன.

கருதுகோள்

பிறந்தது முதல் நடந்த நிகழ்வுகள் யாவும் நினைவுகளாக ஒவ்வொருவரின் மனதிலும் புதைந்து கிடக்கின்றன. அவை சில நல்ல, கெட்ட சூழ்நிலைகளின்போது வெளிப்பட்டு மீண்டும் மறைகின்றன. ஆனால் கவிஞர் நா.முத்துக்குமார் தனது பால்யகால நினைவுகளை மறக்காமல், ஆழ்மனதிலிருந்து வெளியே கொண்டுவந்து தன் படைப்புகளின் வழி எதிர்காலத் தலைமுறையினருக்குத் தகவல்களாக தந்துவிட்டுச் சென்றுள்ளதை அனைவரும் அறியவேண்டும் என்ற கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வுஅணுகுமுறை

இவ்வாய்வு பொதுவாக விளக்கமுறை ஆய்வாகவும், பகுப்புமுறை ஆய்வாகவும், உளவியல் ஆய்வாகவும், சமூகவியல் ஆய்வாகவும், ஒப்பிட்டு நோக்கும் ஒப்பீட்டு முறை ஆய்வாகவும், அமைகின்றது.

ஆய்வுமுன்னோடிகள்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முனைவர்பட்டத்திற்காக புகழ்வாணன் “நா.முத்துக்குமார்படைப்புகள் ஓர் ஆய்வு” என்ற தலைப்பில் ஆய்வுசெய்துள்ளார். ‘ஆனந்தயாழ்’ என்ற தலைப்பில் ‘தமிழ்நாடன்’ என்பவர் முத்துக்குமாருடன் பழகிய கவிஞர்கள், நண்பர்கள், இயக்குநர்கள், மற்றும் உறவுகள் முத்துக்குமாருடன் பழகிய நினைவுகளை, அவர் இறப்புக்குப் பின் பகிர்ந்துள்ளதை நூல் வடிவமாக தொகுத்து வெளியிட்டுள்ளார். நா. முத்துக்குமார் குறித்த ஆய்வுகள் அதிகம் வெளிவராத நிலையில் இவ்வாய்வும் ஒருமுன்னோடியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை

ஆய்வுப்பகுப்புமுறை

இவ்வாய்வேடு**‘முன்னுரை’, ‘முடிவுரை’** நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் 1 - கவிஞர் நா.முத்துக்குமாரின் வாழ்வும் எழுத்தும்

இயல் 2 - கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் தனிமனிதஉளவியல்

இயல் 3 - கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் குடும்பஉறவுஉளவியல்

இயல் 4 - கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகஉளவியல்

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்கு தேவைப்பட்ட நூற்பட்டியல் இடம்பெற்றுள்ளது. **“முன்னுரை”** என்பதில் ஆய்வுத் தலைப்பு, ஆய்வுநோக்கம், ஆய்வுத்தரவுகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வேட்டின் அமைப்புமுறை, ஆய்வுப் பயன் என்பன இடம் பெற்றுள்ளன.

இயல் - 1 கவிஞர் நா.முத்துக்குமாரின் வாழ்வும் எழுத்தும்

மனிதனின் சிந்தனை தொடங்கிய போதே படைப்புணர்வும் தோன்றிவிட்டது. மனிதனின் அழகுணர்வு அவன் சமூகமாக வாழத் தொடங்கிய பிறகு, பிறவற்றைப் பற்றி அறிய முற்பட்ட போதே படைப்பிலக்கியங்கள் தோன்றியுள்ளன. தன் எண்ணங்களை வெளியிடும் ஆர்வம், கற்பனை ஆற்றலின் தன்மை இவற்றிற்கேற்ப ஒவ்வொரு படைப்பும் படைக்கப்பட்டுள்ளது. இத்தகைய படைப்பில் ஒரு சில வரிகளில் ஓராயிரம் உணர்வுகளையும், பிம்பங்களையும் பதிவு செய்யக் கவிதையில் இயலுகிறது. குழந்தைமையின் இடைவிடாத வியப்புகள், வாலிபத்தின் வசப்பட மறுக்கும் வண்ணக்கனவுகள், எண்ணிலடங்காத இதயவலிகள், இனிமையான ஏக்கங்கள் என எல்லாவற்றையும்

தனது ஆழ்மனதில் சேமித்து வைத்து, பின் அவற்றை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் கவிதைகளாக, கட்டுரைகளாக, உணர்வுப்பூர்வமான திரைப்படப் பாடல்களாகப் பகிர்ந்து அளித்துவிட்டுச் சென்றுள்ளார் மறைந்த இளம் கவிஞர் நா.முத்துக்குமார். இவரது வாழ்வும், அதன் பதிவாய்த் தோன்றிய எழுத்தும் குறித்து இவ்வியல் ஆராய்வதாக அமைகின்றது.

கவிஞர் நா.முத்துக்குமாரின் பிறப்பு

தமிழகத்தின் பட்டுநகரமாகத் திகழும் காஞ்சிபுரத்தின் ஒருசிறுகிராமமான கன்னிகாபுரத்தில் பிறந்தவர் கவிஞர் நா. முத்துக்குமார். 4 வயதிலேயே தாயை இழந்தவர். தன் அப்பாவின் கைகளை இறுகிப் பற்றிக் கொண்டு, இவ்வுலகைக் கண்டார். வழிநடத்தும் தந்தையின் விரல்கள் முத்துவைப் பல்வேறு திசைகளுக்கு அழைத்துச் சென்றது. இவ்வுலகம் மிகவும் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் கொடுத்தத் தருணத்தில் தந்தையின் விரல்களைப் பற்றியிருந்ததால் அதுவே அனுபவமாக மாறியது. தந்தையின் விரல்கள் பிள்ளைகளுக்குப் புத்தகத்தையே உணவாக ஊட்டி வளர்த்தன.

கல்வியும், ஆளுமை வளர்ச்சியும்

முத்துக்குமார் தனது பள்ளிப் படிப்பை காஞ்சிபுரத்திலேயேத் தொடங்கினார். ஐந்தாம் வகுப்பு முடித்ததும், ஆறாம் வகுப்பில் சேர காஞ்சிபுரம் அந்திரசன் மேல்நிலைப்பள்ளியில் சேர்ந்தார். இப்பள்ளி சென்னை கிறிஸ்துவக் கல்லூரியைக் கட்டிய ஆண்டர்சன் என்னும் ஆங்கிலேயர், 1837 - ம் ஆண்டு கட்டிய கிருத்துவ மிஷினரிப் பள்ளியாகும். பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக்காலத்தில் கல்வித் துறை இயக்குநராக இருந்த நெ.து.சுந்தர வடிவேலு படித்த பள்ளி அது. எவ்வித ஆற்றலுமில்லாமல் நுழைந்த முத்துவை மகாக்கவிஞனாக உருவாக்கி அனுப்பியதில் இப் பள்ளிக்குப் பெரும் பங்கு உண்டு.

உயர்நிலைக் கல்வியை முடித்ததும், பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை இயற்பியல் முடித்தார். இவர் திரைத்துறை இயக்குநர் வாய்ப்புக்கான தேடலில் இருந்த போது, பத்திரிகைகளே துணையாக இருந்தன. ‘சிறுகதைக்கதிர்’ ‘இனிய உதயம்’ ‘தமிழரசி’ ‘புதிய பார்வை’ ‘சுபமங்களா’ ‘ராஜரிஷி’ எனப் பல்வேறு பத்திரிகைகளில் ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளனாகப்

பணியாற்றிக் கொண்டே, திரைத்துறைக்கான வாய்ப்பையும் தேடி அலைந்தார். ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளன் என்பது சுதந்திரமாக, வாரத்தில் ஒரு நாள் வேலை செய்தால் போதும். மீதம் உள்ள ஆறு நாட்கள் பயனுள்ளதாக கழிக்க, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ., தமிழ் இலக்கியம் கற்றார்.

முத்துக்குமார் இயற்பியலில் 90 சதவிகிதம் மதிப்பெண் பெற்று இளங்கலை முடித்திருந்ததால் தமிழ் படிக்க வேண்டாம், இயற்பியலையே மேற்படிப்பாக படிக்க, கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் தெ.ஞானசுந்தரம் கூறினார். ஆனால் முத்துக்குமார் தனக்குத் தமிழ் மீது உள்ள ஆர்வத்தால்தான் இலக்கியம் படிக்க வந்தேன் என்று பிடிவாதமாகக் கூறுவதைக் கேட்டு, வியந்த பேராசிரியர், அனுமதித் தந்து சில அறிவுரைகளையும் தந்து ஊக்கப்படுத்தினார். “சும்மா உங்க உறுதியைச் சோதிக்கதான் அப்படிச் சொன்னேன். ஒழுங்காப் படிச்சா தமிழ் எவனையும் தெருவுல நிக்க வைக்காது. ஓய்வா இருக்கும் போது வாங்க. நான் ரசிச்ச நூற்றுக்கணக்கான பாடல்களைக் குறிச்சுக் கொடுக்கிறேன். அதைப் புரிங்சுக்கிட்டு மனப்பாடம் பண்ணா மட்டும் போதும். வாழ்ற வரைக்கும் நீங்க பேசிய பொழச்சிக்கலாம்” என்றார். இதைக் கேட்ட முத்துக்குமாருக்கு புதிதாய் மலர்ச்சி பிறந்தது.

பச்சையப்பன் கல்லூரியில் அவர் தொல்காப்பியனின் மரபியலில், வள்ளுவனின் வாழ்வியலில், கம்பனின் விருத்தத்தில், நாயன்மார்களின் ஆன்மீகத்தில் இளங்கோவடிகளின் சீற்றத்தில், கலிங்கத்துபரணியின் களியாட்டத்தில், குற்றால குறவஞ்சியின் அழகியலில், அருணகிரிநாதரின் சந்தத்தில், சித்தர் பாடல்களின் தத்துவத்தில் தன் மனதை உள் செலுத்தி உணர்ந்து கற்றுத் தெளிந்து முதல் மாணவனாகத் தேர்ச்சிப் பெற்றார்.

முதல் திரைப்படப் பாடல் எழுதும் வாய்ப்பு

திரைப்பட இயக்குராகும் விருப்பம் முத்துக்குமாருக்குள் ஏற்பட்டது. இதற்காக திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டார். ஆனால் அந்த விருப்பம் நிறைவேறவில்லை. சில நாட்கள் அலைந்து திரிந்துப் பின் இயக்குநர் பாலுமகேந்திராவிடம் சேர்ந்தார். இந்த காலக்கட்டத்தில்தான் இயக்குநர் சீமானுக்கு ‘வீரநடை’ என்ற படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. இசை தேவா. அதில் முத்துக்குமாரை பாட்டெழுதக் கூறினார் சீமான். அப்படத்தில் கதாநாயகிக்குப் பிடித்தவற்றைப் பட்டியல் போடும் பாடல்

அது. அவர் பெயரிலேயே தொடங்கும் முத்து என்ற சொல்லிலேயே பாட்டைத் தொடங்குவது என திட்டமிட்டு அந்த பாடலைத் தொடங்கினார்.

“முத்து முத்தா பூத்திருக்கும் முல்லைப் பூவ பிடிச்சிருக்கு..
கொத்து கொத்தா காய்த்திருக்கும் திராட்சை பழம் பிடிச்சிருக்கு..
அந்த மலை மேலேஓடும் வெள்ளை மேகம் பிடிச்சிருக்கு
இந்த நதியோரம் நீந்தும் சின்னமீனும் பிடிச்சிருக்கு
இன்னும் என்னென்னமோ பிடிச்சிருக்கு..
எல்லாம் ரொம்ப பிடிச்சிருக்கு....

என்பதாக இப்பாடல் அமைந்திருக்கிறது. தமிழில் அதிக அளவிலான உவமைகளோடு வெளியான முதல் பாடல் என்ற மகுடத்தைப் பெற்றது. பாட்டு முழுவதும் ஹைக்கூ படிமத்திலேயே எழுதியிருப்பார். மிகவும் ரசனையான படிம உத்தியைக் கொண்ட பாடலாக விளங்குகிறது.

திரைப்படப் பாடல் வாய்ப்புகள்

முதல் பாடலைக் கேட்டவுடன் இயக்குநர்கள் வசந்த், ரவிக்குமார், செல்வராகவன், வசந்தபாலன் என பலரும் வாய்ப்புகளைத் தர புகழ் ஏணியின் உச்சத்துக்கு விரைந்து சென்றார் முத்துக்குமார். பல பாடல்கள் அவருக்குத் தனித்த அடையாளத்தை அளித்தன. மிக எளிமையான நடையில்,

‘தேவதையைக் கண்டேன்,காதலில் விழுந்தேன’
‘அவள் அப்படிஒன்றும் அழகில்லை’
‘பூக்கள் பூக்கும் தருணம்’
‘கண் பேசும் வார்த்தைகள்’
‘நினைத்துநினைத்துப் பார்த்தேன்’
‘முதல் மழை எனை நனைத்ததே’
‘உனக்கென இருப்பேன்’

போன்ற அவர் எழுதியுள்ள நூற்றுக்கணக்கான பாடல்கள் நவீனக் காதலின் அடையாளமாகவே இருக்கின்றன.

எளிய மனிதர்கள்தான் தங்களின் உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்கத் தெரியாமல் தவிப்பார்கள். அவர்களின் குரலாகத் தன் பாடல்கள் ஒலிக்கவேண்டும் என்று முத்துக்குமார் விரும்பினார்.

வைரமுத்துவும், வாலியும் கோலோச்சிய கடந்த 15 வருடங்களில் திரையுலகில் உள்ளே நுழைந்து, தனக்கான ஒரு உலகை அமைத்துக் கொண்டு சாதித்தவர் முத்துக்குமார் எனில் மிகையாகாது. 1999 முதல் இறக்கும் வரை

குறைந்தது பத்து, பனிரெண்டு வருடங்களில் 1500 பாடல்கள் சாத்தியமாயிருப்பது வாய்ப்பேயில்லை.

முத்துக்குமாரின் படைப்புகள்

கவிஞர் நா. முத்துக்குமார்

- தூசிகள்
- பச்சையப்பனிலிருந்துஒருதமிழ் வணக்கம்
- நியூட்டனின் மூன்றாம் விதி (கவிதைத் தொகுப்பு)
- பட்டாம் பூச்சிவிற்பவன் (கவிதைத் தொகுப்பு)
- அனாஆவன்னா (கட்டுரைகள்)
- என்னைசந்திக்ககனவில் வராதே
- சில்க் சிட்டி (நாவல் வெளிவராதவை)
- பாலகாண்டம் (கட்டுரைகள்)
- குழந்தைகள் நிறைந்தவீடு (ஹைக்கூ கவிதைகள்)
- வேடிக்கைப் பார்ப்பவன் (கட்டுரைகள்)
- அணிலாடும் முன்றில் (உறவுகள் குறித்துஆனந்தவிகடனில் வெளிவந்தகட்டுரைகள்)
- கண் பேசும் வார்த்தைகள் ஆகியவற்றைப் படைத்துள்ளார்.

இவற்றில் சில்க் சிட்டி என்ற நாவலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இது அவர் வாழ்ந்த பட்டுக்குப் பெயர் போன காஞ்சிபுரத்தின் பெருமைகளைக் குறிப்பிட்டு எழுதப்பட்ட நாவலாகும். ஆனால் முத்துக்குமார் முடிப்பதற்குள் இறந்து விட்டார்.

முத்துக்குமார் பெற்ற விருதுகள்

பல்வேறு விருதுகள் கவிதை இலக்கியம் படைத்த நா.முத்துக்குமாரைத் தேடி பெருமைப்படுத்தின.

- 1997 - ஸ்டேட் பேங்க் விருது – பட்டாம்பூச்சி விற்பவன்
- 2005 – தமிழக அரசின் சிறந்த பாடலாசிரியர் விருது –படம் - கஜினி
- 2006 – பிலிம் பேர் விருது - ” படம் - வெயில்
- 2007 - பிலிம் பேர் விருது ” படம் - சிவாஜி
- 2009 – பிலிம் பேர் விருது - ” படம் - அயன்
- 2009 - பிலிம் பேர் விருது ” படம் - சிவா மனசுல சக்தி.

- 2013 - தேசிய விருது ” படம் - தங்க மீன்கள்
- 2014 - தேசிய விருது ” படம் - சைவம்

எனப் பல விருதுகள் பெற்று, தமிழ் திரையுலகிற்கு அவரின்றி யாராலும் நிரப்ப முடியாத இடத்தை விட்டுச் சென்றுள்ளார் என்ற குறையோடு அவரின் எழுத்துக்கள் இன்னும் புதிதாக பிறக்காமல் இருக்கின்றன என்பதை அறியும் போது, மனங்கள் கணத்தோடு கண்ணீர் விடுகின்றன. ஆனால் என்றும் தமிழ்த் திரையுலகமும், தமிழ் இலக்கியமும் வாழும் வரை அவர் எழுத்துக்கள் வழி வாழ்ந்து கொண்டு இருப்பார் என்பதை அவரது படைப்புகளின் தரம் வழி அறியமுடிகின்றது.

இயல் - 2 கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் தனிமனிதஉளவியல்

படைப்பு என்பது அனுபவப் பரிமாறல் ஆகும். மொழியை ஊடகமாகக் கொண்டு படைப்பிலக்கியம் அர்த்தமுள்ளதாகவும் அதை வாசிக்கும் வாசகனின் மனதில் சென்று அவனை மாற்றும் தன்மையுள்ளதாகவும் அமைகிறது. அப்படிப்பட்ட படைப்பிலக்கியங்கள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வகையில் நா.முத்துகுமார் படைப்புகளில் பதிவாகியுள்ள தனிமனிதஉளவியல் குறித்து விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

உளவியல் - சொல் பொருள் விளக்கம்

உள்ளத்தின் இயல்பு, அதில் எழும் உணர்வுகளின் பக்குவநிலை, அவ்வுணர்வு வெளிப்பட்டால் விளையும் பண்பட்ட செயல்கள் போன்றவற்றைப் பற்றிய அறிவும், ஆய்வும் மனித குலத்தை வாழ்விக்கிறது. உள்ளமும், உள்ளம் சார்ந்த செயல்பாடுகளின் தொகுதியும் உளவியலாக அறியப்படுகிறது. உள்ளம் என்பது ஒரு பருப்பொருளன்று. அது அனுமானிக்கப்படும் கருத்தளவிலான நுண்பொருள், மனிதன் வெளிப்படுத்தும் உணர்வுகளையும், செயல்களையும் ஆதாரமாகக் கொண்டு உள்ளத்தின் இருப்பையும் இயல்பையும் அனுமானிக்கின்றனர்.

நா.முத்துக்குமார் கட்டுரைகளில் தனிமனித உளவியல்

கட்டுரைகள் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றி சரியானக் கருத்துக்களோடு எழுதப்படுவதாகும். தொடக்கத்தில், முடிவு பெறாத கருத்துக் குறிப்புகள் கட்டுரை எனப்பட்டது. ஆனால் இப்போது அளவில் வரையறை உடையதும், விரிந்த நடையுடையதுமான கருத்தோவியமே கட்டுரையாகியுள்ளது. கட்டுரை என்பது அடிப்படையில், தற்சார்பு உடையதாகும். கட்டுரை

அனுபவத்திலிருந்து பெற்ற சிந்தனை வளர்ச்சியால், உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு அறிவுறுத்தவும் விளக்காக அமைகிறது. இக்கால இலக்கியங்களுள் கட்டுரை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. சிறந்த கட்டுரைகள் உள்ளம் கவரும் வகையில் நல்ல வடிவங்களோடு அமைகின்றன. எனவே, இலக்கிய ஆய்வில் கட்டுரைகளும் இடம் பெறுவது இன்றியமையாததாகும். ஆனால், அது பொருள், நோக்கம், நடை ஆகியவற்றை ஒட்டி வேறுபடுகிறது. கட்டுரை, தன்னுணர்ச்சிப் பாடலைப் போன்று ஆசிரியரின் தன்னுணர்வை வெளிப்படுத்துகிறது. இத்தகைய கட்டுரைகளை நா.முத்துக்குமார் வேடிக்கைப்பார்ப்பவன், பாலகாண்டம், கிராமம், நகரம், மாநகரம், அணிலாடும் முன்றில் ஆகிய தலைப்புகளில் வெளியிட்டுள்ளார். இந்நான்கு கட்டுரை நூல்களிலும் முத்துக்குமார் தன் வாழ்வில் பார்த்த, ரசித்த, படித்த, கேட்பித்த, அனுபவித்த, வாழ்ந்தவற்றைப் பற்றி தன் வரலாற்றுப்பாணியில் தனக்கே உரிய எளிமையான தமிழ் நடையில் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு நூலும் வித்தியாசமான அனுபவங்களோடு எழுதப்பட்டுள்ளது. உறவுகளிடையே அவர் கண்ட நேயம் மற்றும் பிற பண்புகளையும் பதிவுசெய்துள்ளார். ஒவ்வொரு கட்டுரையும் வாசிக்கும் வாசகர்களை அவர்களின் குழந்தைமை நினைவுகளுக்கு அழைத்துச் செல்லும் ஓடமாக அமைகின்றன. நா. முத்துக்குமாரின் கட்டுரைகள் வழி, அவரது ஆளுமை, நோக்கம், வாழ்வைப் பற்றிய அவரின் கண்ணோட்டம், படைப்புத் திறன் போன்றவற்றை நன்கு அறியமுடிகிறது.

உளவியலும் தனிமனிதவளர்ச்சியும்

தனிமனித உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் உளவியலின் பங்கு முக்கியமானதாகும். குழந்தைப்பருவம் முதல் முதுமைக்காலம் வரை மனிதநடத்தை ஒரே தன்மையாக இருப்பதில்லை. அது பருவம் தோறும் மாறுபடுகிறது. மனிதநடத்தையின் பெரும் பகுதிக்கான வித்துக்கள் குழந்தைப் பருவத்திலேயே ஊன்றப்பட்டுவிடுகின்றன. ‘குழந்தைப் பருவ உளத்தியல் ஆய்வுகள் அடுத்தடுத்துவரும் பருவநடத்தை மாற்றங்களைப் புரிந்துகொள்ளத் துணைசெய்கின்றன. குழந்தைப் பருவம், இளமைக்காலம், முதுமைக்காலம் ஆகிய காலகட்டங்களில் ஏற்படும் சிந்தனைக்கூர்மை உணர்வுகளின் வளர்ச்சிமாறும் சூழ்நிலைகளைக் கையாளும் திறன் ஆகியன தொடர்பாக எழும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணப் ‘பருவவளர்ச்சி உளவியல்’ஆய்வுகள் பெருமளவில்

பயன்படுகின்றன. “மனமானது புலனுணர்ச்சி, உணர்வு, எண்ணங்கள் போன்ற அனுபவங்களைப் பெரும் கருவியாகும். மனத்தில் ஒரு சிறு பகுதி நனவுநிலையிலும் பெரும்பகுதி நனவற்ற ஆழ்நிலையிலும் இருப்பதாக உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.” (SigmunalFrued, Psychiatry, EncyclophediaBritannica,Vol.10,P.713) உளவியல் பற்றிய ஆய்வு அக்காலத்தில் ஓர் ஊகத்தின் அடிப்படையிலேயே இருந்துள்ளது. இன்று உளவியல் தனித்துறையாகவே செயல்படுகின்றது.

குழந்தைமையின் நினைவுகள் மிகவும் சிக்கலானவை. உண்மையில், கண்ணாடியைப் பார்க்கும் போதெல்லாம், தங்கள் குழந்தைப் பருவத்தைத் தான் திரும்பிப் பார்ப்பதாக அறியமுடியுகிறது. வாழ்வில் பார்க்கும், சந்திக்கும் சில நிகழ்வுகள் வழி நினைவுகள் பிம்பங்களாக வெளிப்படுகின்றன. மனதில் எந்நேரமும் நிழலாடிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் என்னும் பிம்பங்கள் வெளிவரும் சூழல் வரும் போது கண்ணீரோடு வெளிப்படுகிறது. இத்தகைய நினைவுகளை நினைக்கும் தருணங்களில் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய இயல்பே ஏற்படும். முத்துக்குமாருக்கு இப்படி எண்ணிப் பார்க்கிற நேரங்களில் எளிதில் உணர்ச்சி வசப்பட கூடியவராகவே இருந்தார் என்பதை ‘இவன் அவனாகும் அத்தியாயம்’ என்ற தலைப்பில், “அவன் பிரச்சினையே வேறு, பால்கனி ரோஜாச் செடி பட்டுப்போனால் அழுவான். அவன் பிள்ளை, இவன் கன்னத்தில் முத்தம் கொடுத்து, ‘நீங்க தானப்பா இந்த உலகத்திலேயே பெஸ்ட் அப்பா’என்று சொன்னால் அதற்கும் அழுவான். இப்படிதான் சில மாதங்களுக்கு முன்பு மறைந்த இராசுமதுரவனின் ‘மாயாண்டி குடும்பத்தார்’ திரைப்படத்தை ஏதோ ஒரு தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, அவன் அழுதுக்கொண்டே இருந்தான். அந்த படத்தைப் பார்க்காதீங்க. அழுவீங்கனு சொன்னேன்ல, என்று மனைவி முறைத்ததும், அவன் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டான்” என்று அவர் நண்பர் தமிழ்நாடன் எழுதிய ஆனந்த யாழ் புத்தகத்தில் குறிப்பிட்டுருந்ததைப் போல் முத்துக்குமார் உணர்ச்சிமிகுத் தருணங்களில் எளிதாக கண் கலங்கும் நிலையில் இருந்தார் என்பதும் இதற்குக் காரணம், அவரின் ஆழ்மனதில் நீங்காதிருந்த சோகங்கள் பல என்பதும் அறியமுடிகிறது.

இவ்வாறு ‘வேடிக்கைப் பார்ப்பவன்’ என்னும் கட்டுரை நூலில், அவன் ஆழ் மனநினைவுகளைப் பகிர்ந்து கொண்டதோடு மட்டுமில்லாமல்,

திரைப்படத்துறையில் அவர் நுழைந்த அனுபவங்கள், பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து படித்த அனுபவங்கள், திரைப்படப்பாடல்கள் எழுதிய அனுபவங்கள் என்பவற்றை நினைவு கூர்ந்துள்ளார். நூலின் முடிவில்,

சுடலையிலேவேகும் வரை
சூத்திரம் இதுதான் கற்றுப்பார்
உடலை விட்டு வெளியேறி
உன்னை நீயே உற்றுப்பார்!

என்று குறிப்பிடுகின்றார். “ஆனால், அப்படியெல்லாம் போகிறபோக்கில் வாழ்க்கையை வேடிக்கைப் பார்த்துவிடமுடியுமா? ‘‘பனித்துளியின் நுனியில் பிரதிபலிக்கிறது சூரியன். இன்னும் கொஞ்சம் நேரத்தில் பனித்துளி உருகிவிடும் என்பது சூரியனுக்குத் தெரியும். தான் கரைந்து விடுவோம் என்பது பனித்துளிக்கும் தெரியும். ஆனாலும், சூரியனைச் சிறைப்பிடித்த அந்த ஒருகணத்தின் பெருமிதமே பனித்துளியின் வாழ்க்கை’’ **(நா.முத்துக்குமார்)** என்று பதிவுசெய்ததிலிருந்து வாழ்வை பனித்துளியின் உயிர்ப்புபோல, மறையும் தன்மை கொண்டதாக உணர்த்திச் சென்றுள்ளார் நா.முத்துக்குமார்.

உள்மனப் பதிவின் அடையாளங்கள்

முத்துக்குமார் தான் பிறந்து, வளர்ந்து, பிழைக்க வந்த கிராமம், நகரம், மாநகரம் குறித்து தன் உள் மனப் பதிவிலிருந்து கூறப்பட்டுள்ள அடையாளங்களை,

- கிராமம் - பாட்டிகளின் சுருக்குப்பையில் உள்ள சில்லறைகளை போன்றது.
- நகரம் - அம்மாக்களின் அஞ்சறைப் பெட்டியில் உள்ள சில்லறைகளைப் போன்றது.
- மாநகரம் - அப்பாவின் சட்டைப்பையில் உள்ள ரூபாய் நோட்டுக்களைப் போன்றது.

என்று குறிப்பிடுகிறார். கட்டுரைகள், கவிதைகள் வழி நா.முத்துக்குமார் படைத்த படைப்புகளின் வழி பல அனுபவங்களை வாசிக்கும் வாசகர்களின் நினைவுகளும் கைகோர்த்து செல்லும்படி எழுதியுள்ள தகவல்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் படைப்புகள் வழி, இவ்வியலில் ‘தனிமனித உளவியல்’ ஆராயப்பட்டுள்ளது.

இயல் - 3 கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் குடும்பஉறவு உளவியல்

சமூகத்தின் அடிப்படை உறுப்பாக அமைந்திருப்பது குடும்பம், இக்குடும்பமே குழந்தையின் உணர்வுகளை வடிவமைப்பதில் மாற்றுவதில் முதலிடம் வகிக்கிறது. வரையறையின்றி வெளிப்படும் குழந்தையின் உணர்வுகளைச் செப்பமாக வடிவமைப்பதிலும், வழிமாற்றுவதிலும் பெற்றோர், உறவினர், நண்பர்கள் பெரும் பங்குவகிக்கின்றனர். சமுதாயம் ஏற்கும் வகையில் குழந்தை தன் உணர்வுகளை வெளிபடுத்த இவர்கள் துணை செய்கின்றனர். குழந்தை தன்னுடைய அடிப்படையில் உணர்வுகளைத் தன் விருப்பப்படி நிறைவு செய்து கொள்ள முற்படும் போது, தடைகள் நேரின், மனதில் போராட்டம் ஏற்படும். இதனால் தன்னிலை உணர்வும், கற்பனை உணர்வும் உருவாக பெற்றோரின் நடத்தை, குடும்பச்சூழல், உறவினர்களின் அணுகுமுறை, நண்பர்களின் உறவு ஆகியன பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய உறவுகள் குறித்து கவிஞர் நா.முத்துக்குமார் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ள குடும்ப உறவுகளின் உளவியலை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

குடும்ப உறவுகள்

சமூகவாழ்வின் மேன்மைகளுக்கும், தாழ்வுகளுக்கும் உறவுகள் காரணமாகின்றன. மனித வாழ்வில் ஏற்படும் குழப்பம், தடுமாற்றம், இயலாமை போன்றவற்றைப் போக்கித் தாங்கவும், குறைநிறைகளுக்குக் காரணமாகவும் உறவுகளே அமைகின்றன. நெருக்கமான குடும்பஉறவுகளும், மாறக்கூடிய சமூகஉறவுகளும் வாழ்க்கையின் அரண்களாகவும் மனிதர்களை இணைக்கும் பாலமாகவும் சூழலுக்கேற்ப மாற்றம் பெறுகின்றன. இத்தகைய உறவுகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அறியலாம்.

மேலும் உறவுகள் நிரந்தர உறவுகள், தற்காலிக உறவுகள் என்றும் வகைப்படுத்தலாம். உறவுகளிடையே ஏற்படும் நெருக்கமும், விலகலும், கனிவும், கண்டிப்பும், ஒத்துப்போதலும், எதிர்த்தலுமான சிக்கல்களை நா. முத்துக்குமார் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார். தனக்கு அமையப் பெற்ற உறவுகளின் தன்மைகள், அவர்களோடு இருந்த நேர், எதிர் அனுபவங்கள், நிறை குறைகள் குறித்து படைப்புகள் தெரிவிக்கின்றன. இப்பதிவுகள் அனைத்தும் நா.முத்துக்குமாரின் ஆழ்மனத் தூண்டுதல்கள், ஏக்கங்கள் போன்றவற்றின் பாதிப்புகளினால் உருவானவையாகும். பலகட்டுரைகளில் குழந்தைப் பருவத்தின்

நினைவுகள் வழியாக, உறவுகளை அணுகி இருக்கிறார். வயதும், அனுபவமும் கொஞ்சம் நினைவுகளோடும், இதயம் மறக்க நினைக்கும் குறைகளோடும் இன்றைக்கும் இதே உறவுகளை வேறு கோணத்தில் திருப்பிக்காட்டுகின்றன. ஒவ்வொரு வயதிலும், வெவ்வேறு தோற்றம் காட்டும் கண்ணாடியாக வாழ்க்கையைக் கண்டிருப்பதை உணர முடிகிறது.

நா.முத்துக்குமாரின் படைப்புகளில் உறவுகள்

மனப்பதிவு என்பது, உணர்வுகளின் தொகுப்பு அல்லது நிறைவு என்பது பெறப்படுகிறது. ஒருவரைப் பற்றி உருவான மனப்பதிவானது அன்பு, பாசம், இரக்கம், நன்மை, பெருமை போன்ற நற்பண்புகளின் தொகுப்பால் ஆனது என்றால், அவரை விரும்புகிறோம். நண்பராகக் கொள்கிறோம். அச்சம், கோபம், தன்னலம், பொறாமை போன்ற நற்பண்புகளின் தொகுப்பால் ஆனது என்றால், அவர் விரும்பப்படுகிறார். நண்பராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். அச்சம், கோபம், தன்னலம், பொறாமை போன்ற பண்புகளின் தொகுப்பு நிராகரிக்கப்படுகிறது. அத்தகைய பண்புகளைப் பெற்றவர்கள் பகைவராகப் பார்க்கப்படுகிறார்கள். விருப்பும், வெறுப்பும் மனதில் உருவான பதிவுகள் என்பதால் வெளிப்படும் உணர்வுகளும் மாறுகின்றன. அனைவரும் விரும்பும் வண்ணம் ஒருவர் தோற்றமளித்து செயல்பட்டால், அவரிடமிருந்து வெளிப்படும் தூண்டல்கள் மனதில் விரும்பத்தக்க பதிவுகளை அழுத்தமாக ஏற்படுத்திவிடுகின்றன. நம் மனத்தில் பதிந்த உருவைக் கொண்டு அவரை விரும்புவதும், நட்பு கொள்வதும் அமைகிறது.

உறவுகளின் முழுமையை ‘அணிலாடும் முன்றில்’ என்ற நா.முத்துக்குமாரின் கட்டுரை நூல் உறவுகளைக் குறிப்பிடுகின்றது. பிறப்பு வழி உறவுகளாக, அம்மா, அப்பா, அக்கா, தம்பி, ஆயா, தாய்மாமன், அத்தை, தாத்தா, சித்தி, அண்ணன், தங்கை, பங்காளிகள், பெரியம்மா, மாமன்கள், (அக்கா கணவன்) சித்தப்பா, அண்ணி போன்றவர்களும் மணவழி உறவுகளாக, மனைவி, மகன் போன்றவர்களும் அறியப்படுகிறார்கள். அன்பு, அரவணைப்பு, நட்பு, பாசம் போன்ற உடன்பட்டு உணர்வுகள் அறிவுக்கூர்மையை வளர்க்கத் துணைசெய்வதாக உள்ளத்தியல் கருதுகிறது. இவ்வுடன்பாட்டு உணர்வுகள் கிட்டாத, தாயற்றக் குழந்தைகள் அறிவுக் கூர்மையில் பின்தங்கி இருப்பர். இவர்களுக்கு வேறு உறவுகளிடமிருந்து, இவ்வுணர்வுகள் கிடைத்தால் அப்பின்னடைவிலிருந்து விடுபட்டு அறிவுக் கூர்மையிலும், கற்றலிலும் ஏற்றம்

பெறுவர். இந்நிலையில்தான் முத்துக்குமார் தாய் இல்லாத குறையைப் பிற உறவுகளிடமிருந்து பெற்றுஅதன் வழி,தன் அறிவுத்திறனை மேம்படுத்தியுள்ளார் என்பதை அவரின் படைப்புகளில் காணமுடிகிறது. அவர் பழகிய மனிதர்கள், உறவுகள், அனுபவப் பாடங்களை வாசகர்களுக்குக் கொடுத்துள்ளார். தன் வரலாறு என்பது படிப்பவர்களுக்குப் பாடமாக உணர்த்தப்படுவது போல் அவரது படைப்புகள் அமையப் பெற்றுள்ளன.

நா.முத்துக்குமார் காணும் அம்மாக்கள்

பெண்கள் பலநிலைகளில் வாழ்ந்தாலும் தனக்கென்று பிறந்த குழந்தைகளுக்காக, தன்னை வருத்திக் கொண்டும், அவர்களின் நலனுக்காகப்போராடும் தன்மை உடையவராகவும் காணமுடிகிறது. இதை நா.முத்துக்குமார் தனது படைப்புகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அவற்றுள் சில,

- சிறுப்பிள்ளையைக் கையில் ஏந்திக்கொண்டு மாலையில் அகல் விளக்குகள் ஏற்றுபவளாக,
- ஆலமரத்தின் கிளையில் பழையச் சேலையைத் தூளியாக்கி,அதில் குழந்தையைக் கிடத்தி அறுவடை வேலை செய்யும் போது நொடிக்கொரு முறை குழந்தையை வந்து எட்டிப்பார்ப்பவளாக,
- அலுவலகம் சென்றுவந்து, அலுப்போடு இருந்தாலும், அழுக்கோடு இருக்கும் மகனை அணைப்பவளாக,
- பள்ளியின் கதவுகள் காலையில் நேரமானதால் மூடிவிடக் கூடாது என்பதற்காக, பரப்பரப்போடு இருக்கும் மாநகரத்து அவசர வாகன நெரிசலில் தன் இரண்டு சக்கர வாகனத்தில் தன் குழந்தையைப் பத்திரமாகக் கொண்டு வந்து விடுபவளாக அம்மா என்கிற உறவினை நிலைப்படுத்துகிறார்.

அப்பா

கவிஞர் நா.முத்துக்குமாருக்கும், அவரது தந்தைக்குமான உறவு தோழமை உறவைப் போன்றே அமைந்திருந்தது. அப்பா உறவைப் பற்றிக் குறிப்பிடுகையில், தனது அப்பாவின் புத்தக ஆர்வத்தை எண்ணிப் பார்த்து, ந.முத்துக்குமார்க்கு புத்தகங்களைத் தொடர்ந்து படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவர் அவரது தந்தையே. வீடு முழுதையும் புத்தகங்களைக் கொண்டே நிறைத்தவர். கடன் பெற்றாவது நூல்களை வாங்கித் தந்தவர்.

'என் அப்பா
ஒரு மூட்டைபுத்தகம்
கிடைப்பதாக இருந்தால்
என்னையும் விற்றுவிடுவார்'(அணிலாடும் முன்றில் ப.26)

என்று குறிப்பிடுகிறார். இளம் வயதிலேயே புத்தகங்களோடு நா.முத்துக்குமார் தன்னை இணைத்துக் கொண்டதற்கு தந்தையின் வளர்ப்பும், சூழலும் காரணமாக இருப்பதை அறிய முடிகிறது.

தம்பி

தனது தம்பியைப் பற்றிக் கூறுகையில், "நான் மலர்ந்த தொப்புள் கொடியின் இன்னொரு பூ. என் உதிரத்தின் பங்காளி. வேற்றுருவன் ஆனாலும் என் மாற்றுருவன். நான் உண்டமிச்சப் பாலின் ருசி அறிந்தவன். ஆதலால்,என் பசி அறிந்தவன்.என் நாணயத்தின் இன்னொரு பக்கம் துக்கத்தில் எனைத் தாங்கும் தூண். சக ஊன்!" என்று தம்பிக்குச் சரியான ஒரு விரிவாக்கம் கொடுத்துள்ளார். நா.மு. 'தம்பி என்பவன் அண்ணனுக்காகத் தன் இன்பங்களைத் தொலைத்தவன்!" என்ற ஜான் ஆஸ்டின் வாசகத்தைக் கூறுகிறார். நா.முத்துக்குமார் தம்பியோடு இருந்த பிணைப்பு மனநிலை பெறப்படுகிறது.

நா. முத்துக்குமார் குடும்ப உறவுகளின் பண்புகள், குணங்களிலிருந்து பெற்ற அனுபவங்கள் இவற்றைக் கொண்டு தான் வளர்ந்த நிலையில் உயர்த்திக் கொண்ட ஆளுமைகளை வாசகர்களுக்கு எளிமையான அழகுத் தமிழில் கொடுத்துச் சென்றுள்ளதை அறிய முடிகிறது.

இயல் - நான்கு கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகஉளவியல்

சமூகஉளவியல் என்பது, சமூக நபர்களுக்கிடையிலான செயல்பாடுகளையும், தனிநபருக்கும், சமூகத்திற்கும் உள்ள செயல் தொடர்புகளையும் எடுத்துரைப்பதாகும். தனிமனிதன் தான் மட்டும் வாழ்வதில்லை. குடும்பம் என்ற ஒன்றையும் சமூகம் என்றக் கூட்டமைப்பையும் சேர்ந்து அல்லது சார்ந்து வாழ்கிறான். "ஒருவனுடைய நடத்தையை அறிந்து கொள்ள அவனைச் சார்ந்த சமூகக் கண்ணோட்டமும் அவசியமானதாகிறது. சமூக உளவியல் மூலமாகவே பண்பாட்டு நெறிகளை நிலை நிறுத்தமுடியும்" என்று க.பாஞ்சாங்கம் குறிப்பிடுவதிலிருந்து, தனிமனிதனின் நடத்தையை அறிந்துகொள்ளச் சமூகக் கண்ணோட்டம் அவசியம் என்பதை அறியமுடிகிறது. மேலும், சமூகஉளவியல், "தனிமனிதனுக்கும், மற்றவனுக்கும் இடையே

எண்ணற்ற செயல்கள் தோன்றுகின்றன. எண்ணற்ற வழிகளில் எண்ணற்ற தொடர்புகளில் எண்ணிலடங்கா நோக்கங்களில் அச்செயல்கள் எழுகின்றன. எப்படி? ஏன்? எந்தநோக்கில் என ஆராய்ந்து அதன் வழி சமூகத்தில் எழும் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள முற்படுவது சமூக உளவியலாகும்'' என்று செ.சாபரமே கூறியுள்ளார்.

தனிமனிதனும், சமூகமும்

தனிமனிதனின் பார்வையில் உண்பது, உறங்குவது, தன் பணியைச் செய்வது போன்ற செயல்களுக்கு அப்பால் பசி, பாலுணர்வு, ஓய்வு போன்ற உளவியல் நடத்தைகளும் நடைபெறுகின்றன. எனவே தனிநபர் சமூகத்துடன் இணைந்தே செயல்படுகிறான். ''மனிதன் உறவைத்தேடி அலைபவனே. அவன் தனித்து வாழும் இயல்பைக் கொண்டவன் அல்ல. இதனால் தான் குடும்பத்தில் வாழக் கூடியவனாகவும், சமூதாயத்தில் வாழக் கூடியவனாகவும் காட்டப்படுகிறான். குடும்பத்தில் வாழும் போது,அவன் இரத்த உறவோடுப் பழகுகிறான். சமுதாயத்தில் அவன் பழகுவது உறவுமுறைக்கு மீறிய பழக்கம் ஆகும். அதாவது இரத்த பந்தமற்ற உறவு என்று கொள்ளவேண்டும்''என்பதாக துளசி இராமசாமி பதிவு செய்துள்ளதைக் காணமுடிகிறது.

தனிப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றும், தன்னலமின்றிச் செயல்படும் பொழுது, சமுதாய நோக்கம் முழுமையான வெற்றியைப் பெறும். சமுதாய நோக்கம் என்பது சுருங்கக் கூறின், பொதுநலனில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டதாக இருத்தல் வேண்டும். சமுதாய நலனுக்காக ஒவ்வொரு உறுப்பினரும் சில இன்றியமையாத கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டும். சமுதாயத்தின் ஒருசிறுபகுதியே சமுதாயக் கூறாகும். எடுத்துக்காட்டாக, குடும்பம், அரசு ஆகியவற்றைக் காண முடிகிறது. இச்சிறு கூறுகள் இணையும் பொழுது, சமுதாயம் முழு வடிவம் பெறுகிறது. தனிமனிதன், குடும்பம், அரசு, கல்வி, தொழில், சமயம் என ஆறு வகையாகச் சமுதாயக் கூறுகள் பாகுபடுத்தப்படுள்ளன. தனிமனிதனோ, குடும்பமோ மட்டும் சமுதாயம் ஆகாது. மேற்கூறிய ஆறு கூறுகளும் இணையும் போதுதான் சமுதாயமாக வடிவம் பெறும் என்பதை அறியமுடிகிறது.

குடும்பத்திற்கு வெளியே ஏற்படும் மானிட உறவுமுறைகளே சமூகத்திற்கு வழிவகுக்கின்றன. சமூகம் என்பது ஒரு குழுமம் - கூட்டுஅமைப்பு என்னும்

நிலையில்தான் அமையும். இதனை,“சமூகம் என்பது தனிமனிதரால் இணைக்கப்பட்ட கூட்டமாகும். இங்கு மனிதர் குறிப்பிட்ட உறவாலும், நடத்தை முறையாலும் இணைகின்றனர். இக்கூட்டத்தில் சேராதவர்களிடமிருந்து உறவு, நடத்தை ஆகியவற்றால் இவர்கள் வேறுபடுகின்றனர்.” என்று க.பாஸ்கரன் கூறியுள்ளார். எனவே, சமுதாயம் என்பது தனித்தனியே பிரிந்து கிடக்கும் கூட்டமன்று. இச்சமூகத்தில் மனிதர்களிடையே ஒழுங்குமுறையாக உறவு காணப்படுகிறது. அவ்வுறவுகளின் அடிப்படையில்தான் குடும்பம், இனம், வகுப்பு போன்றவை அமைகின்றன. சமுதாயஅமைப்பு முறையில், ஒன்றையொன்று சார்ந்து இருக்கும் நிலையைக் காணமுடிகிறது. மனிதன் தனித்த வாழ்வில் மனநிறைவோ, மகிழ்வோ கொள்ளமுடியாது. அதனால் அவனுக்குச் சமூகம் என்ற அமைப்பு தேவைப்படுகிறது. சமூக நிலை காரணமாக அவன் சமுதாயத்தில் இருக்கின்றான்.

ஒருசமூகம் என்பது பல்வேறான மக்கள் தொகுதிகளை உள்ளடக்கியது. இச்சமூகத் தொகுதியில் படைப்பாளிகளும் வாழ்கின்றனர். இச்சமூகத்தின் சில நிகழ்வுகள் அவர்களைப் பாதிக்கின்றன. இதனால் தாக்கமடைந்த படைப்பாளிகள், தான் கண்ட சமூகத்தின் நிலைகளை,தமது படைப்புகளில் படம்பிடித்துக் காட்டுகின்றனர். அவர்கள் அறியாமலேயே, அவர்களது படைப்புகளில், சமுதாயப் பின்னணியை அமைப்பது உண்டு. தமது படைப்புகளில் தம்மையும், தம்மைச் சார்ந்தவர்களையும், தாம் சார்ந்து வாழும் இவ்வுலகினையும் படைத்தளிக்கிறார்கள். படைப்பாளி என்பவன் தனித்து இயங்குவதில்லை. அவன் சமூகம் என்ற கட்டுக்குள் அடங்கியவனே. அன்றாடம் நிகழும் நடப்பியல் வாழ்வை, படம்பிடித்துக் காட்டுவதால் கவிதைகள், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. இந்நிலையில் நா.முத்துக்குமார் படைப்புகளில் காணும் சமூகஉளவியலைக் கூறுவதாக இவ்வியல் அமைகிறது.

நா.முத்துக்குமார் படைப்புகளில் சமூகஉளவியல்

மனிதனுடைய நடவடிக்கைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி, அவனுடைய புறவாழ்விற்கு வழி செய்வது இயற்கைத் தேர்வாக அமைகிறது. “இயற்கை தன்னுடைய விதிகளுக்கு ஏற்பக் கடைப்பிடிக்கும் கூற்றுத் தேர்வு எனப்படும். ஆனால் சமூகம் தன்னுடைய சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் ஏற்ப உருவாக்குவது சமூகத் தேர்வாகும்.” என்று பாங்கல் கில்பர்ட் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கைத் தேர்வை அடித்தளமாகக் கொண்டு மனிதன்,சமூகத் தேர்வில் சிறப்பான பங்கு கொள்கிறான். இத்தகைய சமூகநிலையில், நா.முத்துக்குமார் தனது படைப்புகளில் தான் பிறந்து, வளர்ந்து, நினைவு தெரிந்த நாள் முதல் இறக்கும் வரை தான் கண்ட,கேட்ட,உணர்ந்த அனுபவங்கள், பழகியமனிதர்கள், இவர்களின் வழி உணர்ந்த சமூகச் சிக்கல்கள், இதனால் ஏற்பட்ட மனஅதிர்வுகள் என இவற்றையெல்லாம் பதிவுசெய்துள்ளார். கீழக்கண்டவகைகளில் அப்பதிவுகள் பகுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

- வாழுமிடம் சார்ந்தபதிவுகள்
    - கிராமத்துப் பின்புலத்துவாழ்வியற் சூழல்
    - மாநகரத்துப் பின்புலத்துவாழ்வியற் சூழல்
- வாழ்வியல் பார்வைகள்
    - பெண்கள் பற்றியசமூகஉளவியல் சிந்தனைகள்
    - எழுத்தாளர்களின் நிலை
    - வறுமைநிலை
    - தொழிலாளர் நிலை
    - அரசியல் பார்வை
    - விவசாயம்,விவசாயிகளின் நிலை

ஆகிய சமூக நிலைகளை முன்வைத்து எழுதப்பட்டுள்ள நா.முத்துக்குமாரின் படைப்புகள் வழி சமூக உளவியல் குறித்த கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

வறுமை நிலை

இன்றைய சமுதாயத்தின் ஒழுக்கம், நேர்மை ஆகிய அறவழிகளை சீர்குலைக்கும் புல்லுருவிகளுள் ஒன்று வறுமையாகும். “வறுமை என்பது மனிதனது நிலைப்பட்ட வாழ்வுக்கு வேண்டிய பொருளியல் தேவையாகும். உயிரோடு வாழ்வதற்கு வேண்டியவையிருப்பினும், சமூகத்தின் பெரும்பான்மையான கூட்டத்தினர் நியாயமான, செம்மையான வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டியவையென கருதுவன இல்லையெனில், அந்நிலையை வறுமை (அதாவது தேவைகள் வற்றிய) நிலை எனக் கொள்வதுண்டு” என்ற கருத்துக்கேற்ப இலக்கியத்தின் வழிவழி வரம்புகளை மீறி, மனித உறவுகளுக்குள் சிக்கலை உருவாக்கும் காரணியாக, வறுமை விளங்குவதால் முத்துக்குமார் வறுமையைப் பதிவு செய்துள்ளார்.

‘சிந்தனையாளன் என்ற பத்திரிகையில் அரசியல், இலக்கியம் குறித்த கட்டுரையில் எழுதி வந்த ‘சங்கமித்ரா’ என்ற எழுத்தாளர் சென்னையில் நடத்திய சிறுதொழில் பயிற்சியில்தான், முதன் முதலில் நா. முத்துக்குமார் கவிஞர் மு.சுயம்புலிங்கத்தை சந்தித்தார். அவரது கவிதைகளைத் தொடர்ந்து படித்து மனதில் நிறுத்திக் கொண்டவர் நா. முத்துக்குமார் சமூகத்தை எடை போடும் அவரது படைப்புகளில் தோய்ந்த நா. முத்துக்குமார் வாழ்வின் வறுமையை,

“நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம்
எங்களுக்கு ஒரு குறையும் இல்லை.
டவுசர் இல்லையென்றுகுழந்தைகள் அழும்
ஒரு அடி கொடுப்போம்.
வாங்கிக் கொண்டுஓடிவிடுவார்கள்.
தீட்டுக் கறைபடிந்த
பூ அழிந்தசேலைகள
பழையதுணிச் சந்தையில்
சகாயமாகக் கிடைக்கின்றன.
இசையைத் தணிக்க
இரவில் எப்படியும் இருட்டுவருகிறது.
கால் நீட்டிதலைசாய்க்க
தார்விரித்தபிளாட்பாரம் இருக்கிறது
திறந்தக் காற்றுயாருக்கக் கிடைக்கும்?
எங்களுக்குக் கொடுப்பினை இருக்கிறது
எதுவும் கிடைக்காதபோது
களிமண் உருண்டையைவாயில் போட்டு
தண்ணீர்குடிக்கிறோம்
ஜீரணமாகிவிடுகிறது
எங்களுக்குஒருகுறையும இல்லை
நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம்!”

(நா.முத்துக்குமார்,வேடிக்கைப்பார்ப்பவன்,ப.44)

இக்கவிதை வழி பதிவுசெய்துள்ளார். இக்கவிதையில் அவர் குறிப்பிடுவது சமூகம் காணும் வறுமையின் உளவியலைத் தான். அவர் கண்ட காட்சிகள்

அவர் ஆழ்மனதில் தேங்கத் தொடங்கியது. பிற்காலத்தில் அதுவே படைப்புகளாக வெளிவரத் தொடங்கின.

சிறுவயது நினைவுகளில், மறக்க முடியாத ஒருநிகழ்வை, நா.முத்துக்குமார் வேடிக்கைப்பார்ப்பவனில் பதிவிட்டுள்ளார். முத்துக்குமார் மூன்றாம் வகுப்பு படிக்கும் போது, தினமும் மாட்டுவண்டியில் செல்வது வழக்கம். அந்தவண்டி அவன் பள்ளிக்குச் சொந்தமானது. குரலை எட்டுமணிக்கு இவன் வீட்டிற்கு வந்து அழைத்துச் செல்லும். போகும் வழியில் நத்தம்பேட்டை, வையாவூர், முத்தையால்பேட்டை எனச் சில கிராமங்களில் படிக்கும் மாணவர்களை அழைத்துக் கொண்டு, இவன் பள்ளி இருக்கும் அய்யம் பேட்டையை வண்டி அடையும்போது மணி 10 ஆகும். அந்தமாட்டுவண்டியை 25 வயது மதிக்கத்தக்க சேகர் என்ற பெயர் கொண்ட ஓர் இளைஞன் ஓட்டினான். வறுமையின் காரணமாக அவ்விளைஞன் தினமும் ஒரு குழந்தையின் உணவை உண்பதும், அதை வெளியில் சொல்லக் கூடாது என்று மிரட்டுவதும் வாடிக்கையாகி இருந்தது. நா.முத்துக்குமாரின் உணவை எடுத்தபோது தலைமையாசிரியரிடம் சொல்ல அவ்விளைஞன் வேலையில் இருந்து விரட்டப்பட்டான். வளர்ந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவ்விளைஞனை சந்திக்கும்போது வறுமையின் காரணமாக, சிறுவயதில் குழந்தைகளின் உணவைத் திருடி உண்பதற்காகவும், அச்செயலுக்காக வருந்தி. தற்போது குழந்தைகளைப் பார்க்கும்போது தின்பண்டம் வாங்கித் தருவதாகக் கூறியதை வறுமையின் காரணமாக எழுந்த உளவியலாகப் பதிவுசெய்துள்ளார். இதனை,

> **“அவன் குதிகாலிட்டு உட்காந்தான், சப்பணமிட்டு**
> **உட்கார்ந்தான், ஒரு காலை நீட்டி உட்கார்ந்து**
> **பார்த்தான், வயிற்றோடு முழங்காலைச் சேர்த்து ஒட்டி**
> **உட்கார்ந்து பார்த்தான் இப்படியும் அப்படியுமாக எப்படி**
> **உட்கார்ந்தாலும் பசித்தது?” (வேடிக்கைப்பார்ப்பவன்,ப.44)**

என்ற கவிதையின் வழி குறிப்பிட்டுள்ளார். வறுமைச்சூழலில், ஏழ்மையோடு தனது வாழ்க்கையைத் தொடர்ந்தவர் நா.முத்துக்குமார். அதன் அனுபவத்தைத 'வேடிக்கைப்பார்ப்பவன்' கவிதை வழிப் புலப்படுத்துகிறார். அதன் விளைவாகவே இளமையில் அடைந்த பசித்துயரம் பாவரிகளாக உருவாகியிருக்கிறது.

“பதின் மூன்று வயதிருக்கும்
பாலத்தின் அருகே
பார்த்தேன் அவனை
நேற்று பூக்கடை
போன வாரம் பஜார் வீதி
என
இடம் மாறுதலே குறிக்கோளாய்
இருக்கிறது அவன் வாழ்வு” (வேடிக்கைப்பார்ப்பவன், ப.36)

என்ற இடத்திற்கு இடம் மாறிச் சென்று வாழும் சிறுவனைக் காட்சிபடுத்தயுள்ளார். சமூக அமைப்பில் வறுமை வாழ்வில் வரும்போது மனிதனின் அடையாளங்களை, பண்பை, நடவடிக்கையை மாற்றுகிறது. மனிதனின் உளவியல் மாறுபாட்டிற்கு, அவன் வாழும் சமூகத்தின் நிலையும் காரணமாக அமைந்திருக்கிறது என்பதனை அவரது படைப்புகள் எடுத்துரைக்கின்றன. இக்கவிதைகளைப் படிக்கும் போது 80,90களில் வளர்ந்த ஒவ்வொருவரின் மனதில் புகுந்துள்ள நினைவுகளின் வெளிப்பாடாக இருக்கின்றன. அவரது எழுத்துக்கள் அனுபவத்தோடு, உள்ளத்து உண்மைகளையே பெரிதும் பிரதிபலித்திருக்கின்றன.

தொகுப்புரை

- கவிஞர் நா.முத்துக்குமார் பிறப்பு,வளர்ந்த முறை, அவரின் தந்தையிடம் பெற்ற ஆளுமைப் பண்பு, கல்வி பெற்ற நிலை, இளமையில் அவரின் இலக்கிய வட்ட அனுபவங்கள்,அவரின் திரைத்துறை ஆர்வங்கள், திரையுலக முயற்சிகள் எனப் பலசெய்திகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.
- திரை அனுபவங்கள் மற்றும் பிற இயக்குநர்களுடனான நட்பு, முதல் திரைப்படப்பாடல் எழுதும் வாய்ப்புப் பெற்றத் தருணங்கள், அடுத்தத்தடுத்து வந்தபாடல் வாய்ப்புகள், முத்துக்குமாரின் படைப்புகள் வழி பெறும் உளவியல் செய்திகள் போன்றவை கூறப்பட்டுள்ளன.

- இலக்கியத்தில் உளவியல் பார்வை, நனவோடைஉத்தி, ஃபராய்டின் உளப்பகுப்பாய்வு முறை, முத்துக்குமாரின் படைப்புகளில் காணப்படும் தனிமனித உளவியல் குறித்து விளக்கப்பட்டுள்ளன.
- மனிதனின் நடத்தைகள், ஒவ்வொரு மனிதனின் ஆளுமை வெளிப்பாடு, குடும்ப உறவுகளின் தன்மைகள், சிறுவயது நினைவுகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன.
- நா.முத்துக்குமாரின் படைப்புகள் வழி காணும் குடும்ப உறவுகளில் அம்மா, அப்பா, அக்கா, தம்பி உட்படமொத்தம் 22 வகையான உறவு முறைகள் குறித்தும் அவர்களிடம் பெற்ற பாடங்கள் உணர்த்திய தருணங்கள் எனபலச் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.
- சமூக உளவியலை முத்துக்குமார் படைப்புகளில் கிராம, நகர, மாநகர சித்தரிப்புகள், வாழ்வியல் பார்வைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன.

பரிந்துரைகள்

'கவிஞர் நா.முத்துக்குமார் படைப்புகளில் உளவியல் சிந்தனைகள்' என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது மனிதனின் ஆழ்மனதில் புதைந்துள்ள நினைவுகளைப் பெயர்த்தெடுத்து அதை அடுத்த தலைமுறைக்கான தகவல்களாக அமைக்கப்பட்டுள்ளன. கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகள் மேலும் பலஆய்வுகளைச் செய்ய வழிவகுக்கும். சான்றாக,

- கவிஞர் நா.முத்துக்குமார் படைப்புகள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்
- கவிஞர் நா.முத்துக்குமார் திரையிசைப்பாடல்கள் கூறும் அனுபவச் சிந்தனைகள்
- கவிஞர் நா.முத்துகக்குமரின் வாழ்வியல் கூறும் ஆளுமைப்பண்புகள்

போன்ற தலைப்புகளிலும் மேலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

……………………………………..

முதன்மைத் தரவுகள்

'முத்துக்குமாரின் வாழ்வும் எழுத்தும்' என்ற முதலாம் இயலில், படைப்பு மற்றும் படைப்பாளர்களின் நிலைகள், கவிஞர் நா.முத்துக்குமாரின் பிறப்பு மற்றும் அவர் தந்தையிடம் பெற்ற அனுபவஅறிவு, கல்வி கற்ற நிலை, இளமையில் பெற்ற இலக்கிய வட்ட அனுபவங்கள், திரைத்துறை ஆர்வங்கள், முயற்சிகள்,

திருமணம், இயக்குநர் பாலுமகேந்திரா மற்றும் பிற இயக்குநர்களுடனான நட்பு நினைவுகள், முதல் திரைப்பட வாய்ப்பு, அடுத்தடுத்த திரைப்படவாய்ப்புகளின் பகிர்வுகள், முத்துக்குமாரின் படைப்புகள் வழி பெறும் உளவியல் சிந்தனைகள், அவர் பெற்ற சிறப்பு விருதுகள் போன்ற செய்திகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

'கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் தனிமனித உளவியல்' என்ற இரண்டாம் இயலில் உளவியல் கருத்துக்கள், நனவோடை உத்திமுறையில் கவிஞர் நா.முத்துக்குமார் கூறும் நினைவுகள், மற்றும் அவரின் படைப்புகளில் காணலாகும் தனிமனிதஉளவியல் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் குடும்பஉறவு உளவியல்' என்ற மூன்றாம் இயலில், கவிஞர் நா.முத்துக்குமார் படைப்புகளின் வழி காணும் குடும்பஉறவுகள் குறித்தும், பிறப்பு வழி, மண வழி ஆகிய இரண்டு முறைகளில் தொடரும் உறவுகளின் நிலைகள் குறித்தும், அம்மா, அப்பா, அக்கா, தம்பி, தாய், தந்தை வழி ஆயாக்கள், தாய்மாமன்கள், அத்தைகள், தாத்தா, சித்தி, அண்ணன், தங்கை, பங்காளிகள், பெரியம்மா, மாமன்கள், சித்தப்பா, அண்ணி, மைத்துனன், மனைவி, மகன் என 22 வகையான உறவுகளிடம் அவர் பெற்ற ஆளுமைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

'கவிஞர் நா.முத்துக்குமாரின் படைப்புகளில் சமூகஉளவியல்' என்ற நான்காம் இயலில், சமுதாயம், தனிமனிதனின் வளர்ச்சியில் சமூகத்தின் பணி, இலக்கியமும் சமுதாயமும், சமூகஉளவியலின் தன்மைகள், முத்துக்குமார் படைப்புகளில் சமூகஉளவியல் என்ற நிலையில், கிராம, நகர, மாநகர சித்தரிப்புகள், வாழ்வியல் பார்வையில் எழுத்தாளர்களின் நிலை, பெண்களின் நிலை, வறுமைநிலை, தொழிலாளர்நிலை, அரசியல் பார்வை, விவசாயம், விவசாயிகளின் நிலை மற்றும் பல சமூகம் சார்ந்த உளவியல் செய்திகள் குறித்தும் ஆராய்ச்சி மேற்கெள்ளப்பட்டுள்ளன.

'முடிவுரை'யில் நான்கு இயல்களும் ஆய்வுசெய்யப்பட்டு அறியப்பட்டக் கருத்துக்கள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்விற்கு உதவிய நூல்களின் பட்டியல் இடம்பெற்றுள்ளது.

ஆய்வுப் பயன்

கவிஞர் முனைவர் நா.முத்துக்குமார் படைப்புகளில் புதைந்துள்ள உளவியல் சிந்தனைகள் வழி மனிதர்களின் ஆழ் மனநினைவுகளைக் கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது. கருநிலை முதல் வளர்ந்த ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதிலும் புதைந்துள்ள எண்ண ஊற்றுகளைக் கண்டறியும் போது, அதில் பெறும் வியப்புகளை அனுபவப் பார்வையில் உணர முடிகின்றது. முத்துக்குமாரின் படைப்புகளில் காணலாகும் மனித உணர்வுகளின் வழி ஒவ்வொருவரின் மனதிலும் புதைந்து கிடக்கும் நினைவுகளை மீட்டெடுக்கும் முயற்சியும் உடன்பாட்டு, எதிர்மறைச் சிந்தனைகளின் பின்புலத்தில் அடையாளப்படுகிறவனாக மனிதன் இருக்கிறான் என்பதும் பெறப்படுகிறது. அதன்வழி செயல்களைக் கட்டமைப்பதில் உளவியலின் பங்கினை அறிதல் ஆய்வின் பயனாக அமைகிறது.

………………………………………………